ஓம் ஈஸ்வராய நமஹ!

# ஆறுமுகனார் தீட்சையின் போது (11-08-2019) அவர் உரைத்த உபதேசம்

மானுடராய் பிறவி கொண்டால்
மாயைகளும் சூழ்ந்துவிடும்
ஆன்மாவின் ஒளிரூபம்
அரையிருளில் மூழ்கிவிடும்
விண்ணுலகும் மண்ணுலகும்
தொடர்பின்றி தொலைந்துவிடும்
கரைகாணா பயணம்தனை
கடிந்தேதான் ஏற்றுவிடும்.

விழிகளை மலர்த்திட்டால்
மாயைகளும் விலகிவிடும்
திரைகள் யாவும் விலகி நின்றால்
ஆன்ம ஒளி மிளிர்ந்துவிடும்
உயிர்க்கூடு கரைந்தழிந்தால்
உயிரும் உடலும் இணைந்துவிடும்
இருபுறமும் கரை கண்டால்
இன்ப வெள்ளம் பாய்ந்துவிடும்.

Gnanalayam

Copyright © 2019 Gnanalayam

மாயைகளும் கர்மங்களும்
தொலைந்தழிய வேண்டுமெனில்
தடைகளைக் களைந்திடுவாய்
திரைகளை நீக்கிடுவாய்
வாழ்கின்ற காலம்வரை
மூலத்தினை உணராது
வாழ்வதினால் பயனேது
வீழ்வதினால் பயனேது.

பிறவியின் காரணத்தை
உணராது வாழ்ந்திட்டால்
பிறவா பெருநிலையை
எய்துவது எங்ஙணம்?
ஆன்மாவின் அடித்தளத்தை
பற்றியே வாழ்பவர்கள்
பரமாத்மாவின் உச்சிதனையும்
எளிதாய் எட்டிடுவர்.

ஆன்மாவை உணர்ந்துவிடு
அருளாசி பெற்றுவிடு
திரைகளை விலக்கிவிடு
தீர்க்க தரிசனம் பெற்றுவிடு
கலியுலகின் எல்லைக்காலம்

இருள் சூழ்ந்தே நின்றிருக்கும்
ஆன்மாவின் ஒளி ஒன்றே
எல்லையினை உணர்த்திவிடும்.

ஒளிரூபம் கண்டிடவே
உள்மார்க்கம் சிறப்புறவே
நஞ்சுகளை அகற்றிவிடு
விழிகளை மலர்த்திவிடு
இகலோகம் பரலோகம்
இரண்டுண்டு வாழ்ந்திடவே
மானுடராய் வாழும் வரை
இகலோகம் நிலைத்திருக்கும்.
ஆன்மாவை உணர்ந்திட்டால்
பரலோகம் நிலைத்துவிடும்.

வாழ்கின்ற இகவாழ்வில்
உன்மத்தம் கொள்ளதே
உண்டிடவும் உறங்கிடவும்
நிரந்தரமாய் முனையதே
ஊன் அழித்து ஒளி பெருக்கு
ஓம்கார நாதம் பெருக்கு
ஆன்மாவின் தரிசனமே
ஆழ்கடலின் அமைதி நல்கும்.

Gnanalayam

இல்வாழ்வில் சுகம் வேண்டும்

தனம் வேண்டும், தானியம் வேண்டும்,

நிலம் வேண்டும், நீர் வேண்டும்,

பொருள் வேண்டும், புகழ் வேண்டும்,

பிணியற்ற உடல் வேண்டும்.

வரங்கள் அனைத்தும் பெற்றிடவே

தெய்வங்களும் அருள வேண்டும்

இவ்விதமே எண்ணுகின்ற

மானுடரின் மனங்கள் யாவும்

அருகினிலே காத்துள்ள

ஆன்மாவினை உணர வேண்டும்.

தெய்வங்களின் அருளாகிய

மின்காந்த அலைகள் யாவும்

உயிரினையே தீண்டிட இயலும்

உயிராற்றலையே பெருக்கிட இயலும்

அருள் நிறைந்த பெட்டகமாம்

ஆன்மாவை உணர்ந்துவிட்டால்

வேண்டும் வரம் பெற்றிடலாம்

பெருவாழ்வும் வாழ்ந்திடலாம்.

திரைகள் ஏழும் சூழ்வதினால்

ஆன்ம தரிசனம் கிட்டுவதில்லை

ஆன்மாவின் ஒளி ஆற்றல்

Copyright © 2019 Gnanalayam 

ஊன் உடலை எட்டுவதில்லை

கலிகால எல்லையிலே

கலியகற்றிக் காத்திடவே

கந்தனே அருள்கின்றோம்

கருணை கொண்டு உரைக்கின்றோம்

தீட்சைகளை பெற்றுவிடு பயின்றுவிடு

திரைகள் யாவும் விலகி நின்றால்

ஆன்ம ஒளி பெருகிவிடும்.

மானுடர்களே, யாம் உரைப்பதனைத் தயை கூர்ந்து செவிமடுப்பீர். ‘ஆறுமுகா ஆறுமுகா’ என அழைத்துக் கதறிடும் குரல் கேட்டோம். கலி எனும் நஞ்சுகள் சூழ்கின்ற இத்தருணத்திலும் கருணை கொண்டே அவதரித்தோம். ஒளி ரூபமாய் காட்சி அளித்திடுவோம். ஓசையின் வடிவினிலும் உமைப்பற்றி நின்றிடுவோம். உபதேசம் அளித்திடுவோம். ஆன்ம விடுதலையும் நல்கிடுவோம்.

எமை அழைத்து அருள் வேண்டி நின்றிட்ட மானிடர்கள், கலி எனும் மாயைகளும், கர்மவினைகளும், அகங்காரப் பதிவுகளும் அகன்றிட கண்டிடலாம். தெய்வங்கள் யாவருமே ஒன்று கூடி மானுட குலம் காத்திட அருள்தனை வழங்கினாலும், அவ்வருள் என்கின்ற காந்த ஆற்றல் கொண்ட எரிபொருளினை ஆன்மாவினால் மாத்திரமே ஏற்க இயலும்.

விடுதலை கண்டு நின்றிடும் ஒவ்வொரு ஆன்மத்துகளும் இறை அருளினை ஈர்த்துப் பெற்றே உயிரின் வசம் அளித்திடும். உயிரானது சிரசில் உள்ள ஒவ்வொரு அணுக்களுக்கும் இறையாற்றலினை பகிர்ந்தளிக்கும் அணுக்கள் யாவும் உடலில் உள்ள உறுப்புகளுக்கும் அவ்வாற்றலை அளித்திடும்.

இறைவன் பரிபூரண அருளினை நல்கினாலும் அவ்வாற்றல்கள் அனைத்தும் கடைநிலையில் உள்ள உடல் உறுப்புகளை அடைவது கடினமே. பல படி நிலைகளைக் கடந்தே ஆற்றலானது பரவிட இயலும். ஒவ்வொரு படி நிலைகளிலும் தடைகள் தோன்றினால் பூரண ஆற்றலானது எல்லையினை அடைந்திட இயலாது. கடை உறுப்புகளும் இறை ஆற்றலினைப் பெற வேண்டுமெனில் தடைகளற்ற தெளிந்த மார்க்கமானது புலப்படல் வேண்டும். அமிலக் கழிவுகளால் கூடிய சவ்வுப்படலங்களே தடைக்கற்கலாய் வீற்றுள்ளன. அதனை அகற்றுவது எளிதல்ல. விழிகளுக்குப் புலப்படாத இறை அருளினால் மாத்திரமே அகன்றிட இயலும்.

தெய்வ நிலை நின்றிடும் ஒவ்வொரு உயர் ஆன்மாக்களும் மானுட ஆன்மாக்களுக்கு உணவளிக்கின்றனர். பசி தாகம் கொண்டவர்கள் இறைஞ்சி நின்று அதிக உணவினைப் பெறுகின்றனர். பசியற்றோர் உணவினைப் பெறத் தவறுகின்றனர். ஆன்மா பெறுகின்ற உயர்ந்த காந்த ஆற்றலானது திரைகள் அற்ற வழித்தடத்திலே தடைகள் ஏதுமின்றி பயணித்து எங்கும் பரவிடும்.

சுயமாய் உருவாகி, தடைகளாய் உயர்ந்திடும், திரைகளை விலக்கினால் மாத்திரமே இறை ஆற்றல் உடலிலே பரவிடும். கலியுகம் தனிலே அமிலக் கழிவுகள் யாவும் அகற்றப்படாத நிலையில் கூடியக் கொண்டே செல்கின்றன. உடற்கழிவுகளும் கூடுகின்றன. உயிர்க் கழிவுகளும் கூடுகின்றன. அக்கழிவுகள் யாவும் விழியின் உட்படலங்களாகவே உருமாறுகின்றன.

உண்ணுகின்ற உணவின் மூலம் உருவாகும் உடற்கழிவுகள் யாவும் அனுதினமும் வெளியேறுகின்றன. உயிரானது ஏற்றிடும் உணவு என்கின்ற கனிம வள ஆற்றல்களின் கழிவு என்பது வெளியேறிட இயலாது உயிரினைச் சூழ்ந்தே சேமிப்புறுகின்றன.

திரைகள் ஏழும் உயரின் அமிலக் கழிவுகளால் உருவான நச்சுப் பதிவுகள் எனும் காரணத்தினால், அனுதினமும், பிரார்த்தனைகளின் மூலமும், வேண்டுதல்களின் மூலமும் உயிர் பெறுகின்ற இறை அருள் என்பது தன் ஆற்றல்களிலே கலந்துள்ள

நஞ்சுகளை திரைகளிலே சேமிப்புகொள்ளச் செய்கின்றன. அக்கழிவுகளை நீக்கிடும் வழியறியாது திகைத்திடும் மானுடர்களுக்கு உதவிடவே ஆறுமுக தீட்சையானது வழங்கப்படுகின்றது.

சூடேற்றிக் குளிர்வித்தல் எனும் நிகழ்வின் மூலம் அமிலக் கழிவுகளாகிய திரைகள் இளகி நஞ்சுகள் வெளியேறுகின்றன. முதன்முறையாக இத்தீட்சையினைப் பெறுகின்ற தருணத்தில் ஆலய மைய ஜோதியில் வீற்றிருந்து அமிலக் கழிவுகளாய் வெளியேறிடும் நஞ்சினை யாமே ஈர்த்தழித்திடுவோம். தொடர் பயிற்சிகளின் தருணத்திலும் ஒளியிழைகளால் தொடர்பு கொண்டு கலியினை ஏற்றே அழித்திடுவோம். நஞ்சுகள் எனும் திரைகள் யாவும் வெளியேறினால் உள் விழிகள் திறவு கொண்டிடும். ஆன்மாவின் ஒளி ரூபம்தனைத் தரிசிக்க இயன்றால் தெய்வ நிலைகளையும் தரிசிக்கலாம், தெய்வ ஆற்றல்களையும் பரிபூரணமாகப் பெற்றிடலாம்.

தடைகளைத் திரைகளாய் வளர்த்திடும் மானுடர்கள் தெய்வ ஆற்றலைப் பெற இயலாது வாடுகின்றனர். தீட்சைகளைப் பெற்று பயின்றிட்டால் தடைகள் விலகும். ஆன்மாவின் ஆற்றலினைப் பரிபூரணமாக பெற்றிட்டால் செயல்கள் யாவுமே சித்தியுறும் எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் உருவாக்கப்பட்ட கழிவுகள் யாவும் ஆன்மாவின் ஒளி ஆற்றலால் நீங்கிவிடும்.

தீயினால் தூய்மையுறுத்தப்படும் விழிகள் இரண்டும் தெளிவுறும், தீர்க்கமடையும். உயிரின் ஆற்றலானது பரவிட விழித்திரைகளே தடையாய் அமைந்துள்ளன எனினும் அவற்றிலே சிக்குண்டுள்ள நரம்பிழைகளே மூலச் செயல் ஆற்றுகின்றது. நரம்பிழைகள் யாவுமே மெல்லியதாய் உருவம் கொண்டிடும். உணவின் ஆற்றல்களை குருதியிலே தாங்கி செயல்படுவதும் நரம்பிழைகளே, உயிரின் ஆற்றல்களையும் விண் குருதியாய் தாங்கி செயல்படுவதும் நரம்பிழைகளே.

அமிலக் கழிவுகளால் உருவான சவ்வுப் படலங்களாகிய திரைகள் நரம்பிழைகளை கடினமுறச் செய்கின்றன. மேலும் சிக்குண்ட நரம்பிழைகளின் மூலம் ஆற்றல்களானது பரவாத வண்ணமும் செயலாற்றுகின்றது. நரம்பிழைகளே

ஆற்றல்களை பரிமாற்றும் வழித்தடமாகும். உயிரின் ஆற்றல்களை உடலிற்குப் பரிமாற்றம் செய்திடும் நரம்பிழைகள் யாவுமே திரைகள் எனும் சவ்வுப்படலங்களில் சிக்குண்டுள்ளன.

தீட்சைகளைப் பெற்று பயில்வதன் மூலம் சூடேற்றம் கண்டு நரம்பிழைகள் யாவும் சவ்வுப்படலத்தின் பிடியினின்று விலகி சீராக செயல்புரியத் துவங்கிடும். சீரான விழித்தடமோ உயிராற்றலை எளிதாய் சுமந்து சென்றிடும். தெய்வங்களின் ஆற்றல்களும் உயிரின் ஆற்றலோடு கலப்பு கொண்டு சீரான நரம்பிழை வழித்தடங்களின் மூலம் உச்சி முதல் பாதம் வரைப் பாங்குறவே பயணித்திடும்.

ஆற்றல்களைப் பெறுகின்ற உறுப்புகளும் சீராக இயங்கிடும், சிரசின் அணுக்களும் ஆற்றல் கொண்டே இயங்கிடும். இதன் மூலம் பெரு நிலை என்பது அபரிமிதமான காந்த ஆற்றலால் உயிரின் துகள்கள் யாவும் சிறையினின்று விடுபட்டு ஆன்மாவினை அடைந்திடும்.

இரண்டாவது பெருநிலை என்பதோ மாயைகளும், கா்மவினைகளும், ஆணவப் படிமன்களும் விலகி உயிரினைக் கண்டிடவும், உணா்ந்திடவும் வழிவகுக்கும்.

மூன்றாவது பெருநிலை என்பதோ உயிராற்றலாகிய விண்குருதி உச்சி முதல் பாதம் வரைச் சீராய் பரவி உடல்தனைக் காத்திடும். உயிராற்றல் தடையின்றி உடலிலே பரவினால் உடலானது காயகல்ப நிலையும் பெற்றிடும் எச்செயலும் எளிதாய் ஈடேறும்.

தீட்சைகளைப் பெறுவது ஒன்றே விழிகளின் முக்கியத்துவத்தினை உணா்த்திடும். பிறவா வரம் பெற்றிட, ஆன்ம விடுதலைதனைப் பெற்றிட வேண்டும். அதற்கான மூலச் செயலாகத், தீட்சை எனும் தீயினால் விழிகளைத் தூய்மையுறுத்தும் செயலினை ஆற்றிடல் வேண்டும். அக்னிப் பிரவேசம் கண்ட விழிகளே தூய்மை அடையும், தூய்மையுற்ற விழகளே இறை தரிசனமாம் ஆன்ம தரிசனம் கண்டிடும். உயா் ஆற்றல்களும் பெருகிடும்.

கலியின் எல்லையிலே, இறுதியாய் மானுட குலத்திற்கு நல்வழி புலப்படுகின்றது என்றே கருதிப் பலனடைய வேண்டும். தெய்வ நிலைகளை உணர இயலாததற்கும் மூல காரணம் விழித்திரைகளே என்பதனைப் பரிபூரணமாக உணர்ந்து கொண்டால் உய்வுற இயலும், அன்றி ஆன்மத்துகள் அழிவினையே ஏற்றிடும்.

விழிகளின் திரைகளே மானுடர்களை இத்தருணத்தில் மறைத்தாள்கின்றது. அதனை நீக்கினால் ஒளி ரூபம் கண்டிடலாம் கலியின் இறுதியிலோ இதனை ஏற்றிடவும் மறுத்திடுவர். உணர்வுகள் இன்றி செயல்படும் மானுடர்களின் மூலம் ஆன்மத்துகள்களே பாதிப்புறும். ஆன்மா விடுதலை பெற்றுவிட்டால் உயர் நிலை நின்று பிற ஆன்மத்துகள்களை விடுவித்திட முயன்றிடலாம்.

விண்ணுலகமும் மண்ணுலகமும் சீராக இயங்கிட வேண்டுமெனில் ஆன்மத்துகள்களாகிய பாதரசத்துகள்கள் யாவும் அழிவுறாமல் காக்கப்படல் வேண்டும். பனிரெண்டு தீட்சைகளை நிறைவு செய்வதன் மூலம் பலகோடி ஆன்மத்துகள்களை யாம் ஈசனுக்கு மீட்டு அளித்துள்ளோம். இறுதியில் உறுதிக் கொண்டு உயிரினை விடுவித்தருள முயன்றிடுங்கள். முயற்சி ஒன்றே வித்தினை விருட்சமாக்கும். முயற்சி ஒன்றே கருவிலிருந்து உருவம் வெளிப்பட உதவிடும். உணர்ந்து செயல்படுவோர் உயர்நிலைதனை எய்திடுவர் ஈச அருளினையும் பெற்றிடுவர்.

Gnanalayam